ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 458) Dec (3) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..3

2. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்)...25

3. பெரிய திருமொழி (வ்யாக்யானம்)..28

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 423)

6-9-4. தளர்ந்தும் முறிந்தும் சகட அசுரர் உடல் வேறாப்
பிளந்து வீய திருக்கால் ஆண்ட பெருமானே
கிளர்ந்து பிரமன் சிவன் இந்திரன் விண்ணவர் சூழ
விளங்க ஒரு நாள் காண வாராய் விண் மீதே

பொருள் – சகடாசுரனுடைய உடலானது "கட்டுக்குலைந்தும், முறிந்தும், வேறாம்படி பிளந்தும், உருவம் தெரியாமல் மாய்ந்தும்" என்றாகும்படியாகத் திருவடியால் அந்தக் கார்யத்தைச் செய்வித்துக் கொண்ட ஸ்வாமியே! தாங்கள் ஈச்வரர்கள் என்ற எண்ணத்தை அகற்றி, நான்முகனும் ருத்ரனும் இந்த்ரனும் தேவர்களும் சூழ்ந்து வந்து வணங்க, அவர்களுக்கு நாயகனான உனது தேஜஸ் வெளிப்படும்படியாக, ஸ்ரீகஜேந்த்ரனுக்கு வந்தது போன்று ஒருநாள் ஆகாயத்தின் மேலே, எனது கண்களுக்குப் புலப்படும்படியாக வரவேண்டும்.

அவதாரிகை - "தளரக் கடவீரல்லீர்; உம்முடைய தளர்த்தி பரிஹரிக்கக் கடவோமானாலும், ப்ரதிபந்தகம் கனத்திரா நின்றது காணும்" என்ன; "ஓம், அப்படியே; சகடாசுரனிலுங் காட்டில் வலியதிறே என்னுடைய விரோதி" என்கிறார். "உன் கால் கண்டபோதே போகாதோ" என்கிறார். "அடிபடிற் செய்வதென்?" என்று "சும்மெனாதே கைவிட்டோடு"மிறே.

விளக்கம் – ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், “நீவிர் தளர்ந்து போகக்கடவர் அல்லர். உமது தளர்ச்சியை நாம் விலக்குவோம். ஆயினும், நாம் அவ்விதம் செய்வதற்கு உம்மிடம் தடைகள் உள்ளனவே” என்றான். இதற்கு ஆழ்வார், “ஓகோ! அப்படியா! சகடாசுரனைக் காட்டிலும் எனது விரோதிகள் வலிமையானதா? சகடாசுரனை அழித்த உனக்கு எனது தடைகளைப் போக்குவதில் சிரமம் உள்ளதோ? உனது காற்றும் திருவடியும் கண்டவுடன் அவை ஓடிவிடாதோ? இவனுடைய திருவடியால் நமக்கு அடிப்பட்டால் என்ன செய்வது என்று அவை திகைத்து, பெரியாழ்வார் திருமொழி (5-4-3) - சும்மெனாதே - ஓடும் அல்லவோ?”, என்றார்.

வ்யாக்யானம் - (தளர்ந்தும் இத்யாதி) - சகடாசுரன் கட்டுக்குலையா, முறியா, உடல் வேறாகப் பிளந்து வீய; “சிந்நம் பிந்நம் சரைர் தக்தம் ப்ரபக்நம் சஸ்த்ர பீடிதம்” என்கிறபடியே. பின்பு, திரளச் சொல்ல துகளுங் காணவொண்ணாதபடியாகை. சகடாசுர நிரஸநம் பண்ணினானென்று வமைந்திருக்க, “தளர்ந்தும்”, “முறிந்தும்” என்று தனித்தனியே சொல்லுகிறாரிறே, ப்ரதிபக்ஷ நிரஸநமாகையாலே அவ்வோ அவஸ்த்தைகள் தமக்கு இனிதாயிருக்கையாலே.

விளக்கம் – (தளர்ந்தும் இத்யாதி) - சகடாசுரன் கட்டுக் குலைந்து, முறிந்து, உடல் வேறாகப் பிளக்கப்பட்டு விழுந்தான். இந்த மூன்றுக்கும் ப்ரமாணம் கூறுகிறார்; யுத்தகாண்டம் (94-22) - சிந்நம் பிந்நம் சரைர் தக்தம் ப்ரபக்நம் சஸ்த்ர பீடிதம் - இராமனால் அறுக்கப்பப்பட்ட, பிளக்கப்பட்ட, கொளுத்தப்பட்ட, முறிக்கப்பட்ட கத்தி போன்று ஆயுதங்களால் வெட்டப்பட்ட அரக்கர்களைக் கண்டனர் – என்பது காண்க. “வீய” என்பதற்கு “பின்பு” என்று தொடங்கி பொருள் கூறுகிறார்; தொடர்ந்து அவன் முறிந்து விழுந்த துகள்களைக் கூட காண இயலாதபடி இருந்தது. “சகடாசுரனைக் கொன்றான்” என்று மட்டும் கூறினால் போதாதோ; “தளர்ந்தும், முறிந்தும்” என்று ஏன் தனித்தனியே கூறவேண்டும்? இதற்கு விடை அளிக்கிறார்; இந்தச் செயலானது பகைவர்களை அழித்தல் என்பதால், அந்த விரோதி மாயும்போது உள்ள ஒவ்வொரு நிலையும் தனக்கு இனியதாக உள்ளதால் இவ்விதம் கூறுகிறார்.

வ்யாக்யானம் - (திருக்காலாண்ட) அடியாரையாண்டால் ஆபத்துக்கு உதவுவர்களிறே. இவன் மௌக்த்யத்தாலே யொன்றுமறியாதே கிடக்க, திருவடிகள் கிடீர் நம்மை நோக்கிற்று என்கிறார். “ஸ்தந்யார்த்தீ ப்ரருரோதஹ” என்கிறபடியே

முலை வரவு தாழ்த்தவாறே அனந்தலிலே திருவடிகளை நிமிர்த்தான்; அவ்வளவிலே பொடிபட்ட வித்தனை; "உருளச் சகடமதுறக்கில் நிமிர்த்தீர்" என்று இவனும் அறிந்து செய்தானல்லன். தன்னையுணர்ந்து பரிமாறும்போது திவ்யாயுதமும், அவையுதவாதபோது கையும், அதுவும் உதவாதபோது திருவடிகளுமாயிருக்கிறபடி. நம்முடைய ஆபத்துக்களுக்கே யன்றிக்கே, அவனுடைய ஆபத்துக்கும் திருவடிகளே காணும் உதவுவது! திருமேனிதான் ஆச்ரிதார்த்தமாகையாலே, அவர்கள் விரோதி போகைக்கும் அதுதானே யுறுப்பா யிருக்கை.

விளக்கம் – (திருக்காலாண்ட) – "திருக்காலால் அழித்த" என்று கூறாமல் "திருக்காலை ஆண்ட" என்று ஏன் கூறினார்? நமக்கு வசப்பட்டவர்களை ஆண்டால் ஆபத்து காலத்தில் உதவி செய்வார்கள் அல்லவோ என்பதால் ஆகும். இங்கு ஈச்வரன் சகடாசுரனை அழித்த போதிலும், "திருவடிகள் அழித்தன" என்று ஏன் கூறினார்? "இவன் தனது ஏதும் அறியாத வயது காரணமாக, ஒன்றும் அறியாமல் கிடந்தான்; அப்போது திருவடிகள் அல்லவோ நம்மை நோக்கின", என்கிறார்; இதற்கு ப்ரமாணம் கூறுகிறார்; ஸ்ரீவிபு. (5-6-1) - ஸ்தந்யார்த்தீ ப்ரருரோதஹ - தாய்ப்பால் வேண்டியவனாக அழுதான் - என்பதற்கு ஏற்ப, தாய்ப்பாலை அளிப்பதற்குச் சற்று தாமதம் ஆயிற்று என்பதால், தூக்கத்தில் திருவடிகளை நிமிர்த்தான்; அந்த நொடியில் சகடாசுரன் பொடியானான். இவன் தூக்கத்தில் காலை நிமிர்த்தான் என்பதற்கு ப்ரமாணம் பெரியதிருமொழி (10-8-3) - உருளச் சகடமதுறக்கில் நிமிர்த்தீர் - என்பதற்கு ஏற்ப, இவன் அறிந்து கொண்டு செய்யவில்லை. ஆனால் திருக்கரங்களில் திவ்யமான ஆயுதங்கள் உள்ளபோது, திருவடிகள் கொண்டு அழித்தது ஏன் என்பதற்கு விடை அளிக்கிறார். தன்னை உணர்ந்து செயலாற்றும்போது திவ்ய ஆயுதங்களும், அவை உதவாதபோது திருக்கரமும், அதுவும் உதவாதபோது திருவடிகளும் என்று உள்ளான். ஆனால் திருவடிகள் நம்முடைய பல ஆபத்திற்கு உதவுபவை அல்லவோ என்றால், நமது ஆபத்துக்களுக்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு நேரவல்ல ஆபத்திற்கும் திருவடிகளே உதவுகின்றன. அப்படியானால், திருவடிகள் அவனுடைய திருமேனிக்கு ஏற்படவிருந்த ஆபத்தைப் போக்கின; இவ்விதம் உள்ளபோது இவை அடியார்களுடைய விரோதிகளைப் போக்குவது எப்படி என்பதற்கு விடை அளிக்கிறார்; அவனுடைய திருமேனியாவது அடியார்களுக்காகவே என்றுள்ளதால், அடியார்களுடைய விரோதியைப் போக்குவது திருவடிகளே ஆகும்.

வ்யாக்யானம் - (பெருமானே) அன்று சேஷியையுண்டாக்கின உனக்கு இன்று சேஷ வஸ்துவை உண்டாக்குகை பெரிய பணியோ? அவன் ப்ரகாரியானால், ப்ரகாரமாயுண்டாமதிறேயிது. (கிளர்ந்து இத்யாதி) "கும்பிடு நட்டமிட்டாடி" என்கிறபடியே அநந்யப்ரயோஜநரைப்போலே, அவசராய்க் கொண்டு ப்ரஹ்ம ருத்ராதிகள், ப்ரதாநரோடு அப்ரதாநரோடு வாசியறக் கிண்ணகம் சுழித்தாற்போலே சூழச் சூழப்பட்டு, இருட்டில் விளக்குப் போலே "தேஜஸாம்ராசிமூர்ஜிதம்" என்கிறபடியே தேஜஸ்ஸே வடிவான திருமேனியைக் கொண்டு, ஒருநாள் ஆனைக்கு வந்து தோற்றினாற்போலே, ஆகாசமடங்கலும் இடமடைக்கும்படி வந்து தோற்ற வேணுமென்கிறார். (விளங்க) இவன் ஸந்நிதியில் ப்ரஹ்மாதிகள் தேஜஸ்ஸு "தமஸ்ஸு" என்னும்படி யிருக்கிறபடி. (ஒருநாள்) "நூறாண்டு, பதினோராயிரமாண்டு" என்று அர்த்தித்தேனோ! (காண வாராய்) "நீணகர் நீளெரி வைத்தருளாயெ"ன்கிறேனோ! (விண் மீதே) இங்கே வந்தவதரிக்கச் சொல்லுகிறேனோ!

விளக்கம் – (பெருமானே) - அன்று "சகடாசுரனைப் பிளந்து திருவடிகளை ஆண்ட எஜமான்" என்பதை நிலை நிறுத்திய உனக்கு, இன்று இந்த அடிமையை அவ்விதம் நிலை நிறுத்துவது பெரிய செயலோ? அவன் ப்ரகாரி என்றால், இவை அனைத்தும் ப்ரகாரங்கள் அல்லவோ? (கிளர்ந்து இத்யாதி) – திருவாய்மொழி (3-5-4) - கும்பிடு நட்டமிட்டாடி – என்பதற்கு ஏற்ப, உன்னை அன்றி மற்றொரு பயன் கருதாமல் உள்ளவர்கள் போன்று, தன் வசம் இல்லாதவர்களாகிய நான்முகன், ருத்ரன் போன்றுள்ள முதன்மையான தேவர்கள் மற்றும் அவ்விதம் முதன்மை அல்லாதவர்கள் என்பதாக உள்ள வேறுபாடுகள் இன்றி, அவர்களால் வெள்ளம் போன்று சூழப்பட்டு. இங்குள்ள "விளங்க" என்பதற்குப் பொருள், நான்முகன் ருத்ரன் போன்றவர்களுடைய தேஜஸ் என்பது இருளுக்குச் சமம் என்பதாகும். அந்த இருளில் ஒரு விளக்கு போன்று; இதற்கு ப்ரமாணம் ஸ்ரீவிபு. (1-19-67) - தேஜஸாம்ராசிமூர்ஜிதம் - ஒளிகளின் கூட்டம் - என்பதாகும். இவ்விதம் தேஜஸ் என்பதே ஒரு வடிவம் போன்றுள்ள திருமேனியைக் கொண்டு, ஒருநாள் யானைக்கு முன்பாக வந்து தோன்றியது போன்று, ஆகாசம் முழுவதும் அடைத்துக் கொள்ளும்படியாக இங்கு வந்து தோன்றவேண்டும் என்கிறார். (விளங்க) - இவன் அருகில் உள்ளபோது, நான்முகன் முதலானவர்களுடைய தேஜஸ் என்பது "தமஸ் - இருள்" என்று கூறலாம்படியாகவே உள்ளது. (ஒருநாள்) - நூறு ஆண்டுகள்

க்ருஷ்ணனைப் போன்றும், பதினோராயிரம் ஆண்டுகள் இராமன் போன்றும் வரவேண்டும் என்று ப்ரார்த்தனை செய்தானோ? ஒருநாள் மட்டும் வந்தாலே போதுமானது என்கிறேன். (காண வாராய்) - திருவிருத்தம் (92) - நீணகர் நீளெரி வைத்தருளாய் - என்பது காண்க. (விண் மீதே) - இங்கே வந்து அவதரிக்க வேண்டும் என்று கேட்கிறேனோ? விண் மீது காட்சி கொடுத்தால் போதுமானது என்கிறேன்.

6-9-5. விண் மீது இருப்பாய் மலை மேல் நிற்பாய் கடல் சேர்ப்பாய்
மண் மீது உழல்வாய் இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய்
எண் மீது இயன்ற புற அண்டத்தாய் எனது ஆவி
உள் மீது ஆடி உருக் காட்டாதே ஒளிப்பாயோ

பொருள் - நித்யஸூரிகளால் எப்போதும் அனுபவிக்கும்படியாக, மேன்மைக்கு எல்லையான பரமபதத்தில் அனைத்திற்கும் ஆத்மாவாக நிற்பவனே! ஞானத்தால் தாழ்ந்தவர்களுக்கும் முகம் காண்பிப்பதற்காக, நீர்மைக்கு எல்லையான திருவேங்கடமலை மீது அர்ச்சாவதாரமாக நிற்பவனே! நான்முன் போன்றவர்கள் அண்டுவதற்காகத் திருப்பாற்கடலில் அநிருத்தன் போன்ற வ்யூஹங்களாக வருவதற்கு ஏற்ப திருக்கண்கள் வளர்பவனே! அறிவில் தாழ்ந்தவர்களை, அழகு கொண்டு வசீகரம் செய்வதற்காக, இங்குள்ளவர்களுடன் சேர்ந்து சமமாக ஸஞ்சரித்தவனே! இந்த ஜகத்தில் உள்ள அனைத்து வஸ்துக்களிலும் அந்தர்யாமியாக, இந்த்ரியங்கள் ஏதும் அவசியம் இன்றி வசிப்பவனே! எண்களுக்கும் அப்பாற்பட்டதும், புறம்புள்ளதும் ஆகிய அண்டங்களிலும் உள்ளவனே! நீ எனது நெஞ்சத்தில் அதிகமாக நடையாடிய பின்னர், கண்களுக்குப் புலப்படாமல் மறைவாயோ?

அவதாரிகை - ஸர்வத்ர ஸந்நிஹிதனாய் என் ஹ்ருதயத்திலும் ஸ்பஷ்டமாக ப்ரகாசித்து, என் கண்ணுக்கு விஷயமாகாதொழிந்தால் நான் தளரேனோ?", என்கிறார்.

விளக்கம் – "அனைத்து இடங்களிலும் அருகாமையில் இருந்தும், எனது இதயத்தில் தெளிவாகப் ப்ரகாசித்தும் நீ உள்ளபோதிலும், எனது கண்களுக்குப் புலப்படாமல் இருந்தால் நான் தளர்ந்துபோக மாட்டேனோ?", என்கிறார்.

வ்யாக்யானம் - (விண்மீதிருப்பாய்) ஸதாதர்சநம் பண்ணும்படியான பாகம் பிறந்தவர்களுக்குக் காட்சி கொடுத்திருக்கும்படி. இவர்க்கு இங்குத்தையிற் காட்டிலும் பரமபதத்திலிருப்புக் காணும் முற்படத் தோற்றுகிறது. (மலை மேல் நிற்பாய்) நித்யஸூரிகளையும் நித்யஸம்ஸாரிகளையும் ஒரு துறையிலே நீருண்ணப் பண்ணுகிறவிடம். இங்குள்ளாரும் தன்னிலையில் வாசியறியும்படி ருசி ஜநகனாய் நின்றபடி. "வேங்கடத்தாடு கூத்தனி"றே.

விளக்கம் – (விண் மீதிருப்பாய்) - எப்போதும் காணலாம்படியாக, நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கும் விதம். இங்கு அருகாமையில் உள்ள அர்ச்சாவதார விக்ரஹத்தை முதலில் கூறாமல் "விண் மீது இருப்பாய்" என்று ஏன் கூறினார் என்றால், அவன் இங்குள்ள இருப்பைக் காட்டிலும் பரமபதத்தில் உள்ள இருப்பே முதலில் தென்படுகிறது. (மலை மேல் நிற்பாய்) - நித்யஸூரிகளையும் நித்யஸம்ஸாரிகளையும், ஒரே இடத்தில் நீர் பருகும் துறை போன்று செய்யவல்ல திருவேங்கடம். இங்கு உள்ளவர்கள் கூட, தனது நிலையின் மேன்மையை அறிந்து ருசி பிறக்கும்படியாகச் செய்பவன். ஆனால் திருவேங்கடமலையில் நிற்கும் நிலையானது ருசியை ஏற்படுத்துமோ என்பதற்கு ப்ரமாணம் பெரியதிருமொழி (2-1-9) - வேங்கடத்து ஆடு கூத்தன் – என்பது காண்க.

வ்யாக்யானம் - (கடற் சேர்ப்பாய்) கால்நடை தந்து போகவல்ல ப்ரஹ்ம ருத்ராதிகளுக்காகத் திருப்பாற்கடலிலே வந்து சாய்ந்தபடி. "விண்மீதிருப்பாயெ"ன்று இருப்பில் வீறு சொன்னார்; "மலை மேல் நிற்பாயெ"ன்று நிலையில் வாசி சொன்னார்; (கடற் சேர்ப்பாய்) கிடையழகு திருப்பாற்கடலிலே பர்யவஸிதம். (மண் மீதுழல்வாய்) அவ்வளவு போகமாட்டாத ஸம்ஸாரிகளுக்காக அவதரித்து, அவர்கள் கண்வட்டத்திலே திரியுமவனே! (உழல்வாய்) "தாம்பாலாப்புண்டாலும் அத்தழும்பு தானிளகப் பாம்பால் ஆப்புண்டு பாடுற்றாலும்" என்கிறபடியே அநுகூலராய்க் கட்டுவாரும் ப்ரதிகூலராய்க் கட்டுவாருமான ஸம்ஸாரமிறே.

விளக்கம் - (கடற் சேர்ப்பாய்) - மிகவும் அருகாமையாக உள்ளதால், கால்நடையாகவே வந்து தரிசனம் செய்யலாம்படி நான்முகன் ருத்ரன் போன்றவர்களுக்காக திருப்பாற்கடலில் வந்து கிடக்கும் நிலை. "விண் மீது

இருப்பாய்” என்று அமர்ந்துள்ள கம்பீரம் கூறினார். “மலை மேல் நிற்பாய்” என்று நிற்கின்ற நிலையின் வேறுபாடு கூறினார். (கடற் சேர்ப்பாய்) - திருப்பாற்கடலில் சயனித்த அழகு நிரம்பி நின்றது. (மண் மீது உழல்வாய்) - அந்தந்த இடங்களுக்குச் செல்ல இயலாதபடி உள்ள ஸம்ஸாரிகளுக்காக அவதரித்து, அவர்கள் கண்பார்வை முன்பாகத் திரிபவனே! (உழல்வாய்) – விபவரூபம் எடுத்து ஸஞ்சாரம் செய்த நிலைகளை “திரிவாய்” என்று கூறாமல் “உழல்வாய்” என்று ஏன் கூறினார்? பெரிய திருவந்தாதி (18) – தாம்பால் ஆப்புண்டாலும் அத்தழும்பு தான் இளகப் பாம்பால் ஆப்புண்டு பாடு உற்றாலும் - என்பதற்கு ஏற்ப, இவனுக்கு விருப்பமாக உள்ள யசோதை போன்றவர்களும், இவனுக்கு விரோதமாக உள்ள காளியன் போன்றவர்களும் இவனைக் கட்டி வைப்பது இந்த ஸம்ஸாரத்தில் ஆகும் என்பதால் “உழல்வாய்” என்றார்.

வ்யாக்யானம் - (இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்) கண்ணாலே காணில் சிவிட்கென்னு மவர்களுக்கு, அவர்கள் காணவொண்ணாதபடி மறைந்து வர்த்திக்குமவனே! விஷய ப்ரவணமான ப்ரஜை “தாய் முகத்திலே விழியேன்” என்றால், தான் மறைய நின்று அவனுகந்தாரையிட்டு ரக்ஷிக்குந் தாயைப்போலே. அதாகிறது, சிசுபாலாதிகள் நறுகுமுறுகு என்றால், அவர்கள் கண்ணுக்குத் தோற்றாதபடி அந்தர்யாமியாய் நின்று நோக்கும்படி.

விளக்கம் – (இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய்) - கண்ணால் காணும்போது கோபம் கொள்பவர்களுக்கும் அல்லது பொறாமைப்படுபவர்களுக்கும், அவர்கள் காண இயலாதபடி மறைந்து நிற்பவனே! மறைந்து நிற்பதும் உபகாரமே ஆகும் என்பதை ஓர் உதாரணம் மூலம் கூறுகிறார். தாழ்ந்த விஷயங்களில் ஈடுபாடு கொள்வதன் காரணமாக ஒருவன் “நான் எனது தாயின் முகத்தில் விழிக்கமாட்டேன்” என்று கூறினால், அந்தத் தாயானவள் அவன் கண்களில் படாமல் மறைந்து நின்று, அவனுக்குப் பிடித்தவர்கள் மூலம் அவனைக் காப்பாற்றுவது போன்று இவனும் செய்கிறான். அதாவது சிசுபாலன் போன்றவர்கள் பொறாமை கொள்ளும்போது அவர்களுடைய கண்களுக்குப் புலப்படாதபடி அந்தர்யாமியாக நின்று, மற்றவர்களை நோக்கும் விதம்.

வ்யாக்யானம் - (எண் மீதியன்ற புறவண்டத்தாய்) எண்ணுக்கு மேலே வர்த்திக்கிற மற்றுள்ள வண்டங்களிலும் இப்படி வர்த்திக்கிறவனே! “கோடி கோடி சதாநிச”இறே. (என தாவியுள் மீதாடி) என் ஹ்ருதயத்தினுள்ளே குறைவற

ஸஞ்சரித்தென்னுதல், என்னாத்மாவுக்கு உள்ளும் புறம்பும் ஸஞ்சரித்தென்னுதல். (உருக்காட்டாதே யொளிப்பாயோ) வடிவு காணப் பெறாவிட்டால், மறந்து பிழைக்கவும் பெறாதொழிவதே. குண ஜ்ஞாநத்தாலே தரிப்பார்க்கன்றோ வடிவு காணாதொழிந்தாலும் தரிக்கலாவது?

விளக்கம் – (எண் மீதியன்ற புற அண்டத்தாய்) - எண்களுக்கும் அப்பால் உள்ள மற்ற அண்டங்களிலும் “பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி மற்றும் அர்ச்சை” என்பதான நிலைகளில் உள்ளவனே! இவ்விதம் பல அண்டங்கள் உள்ளன என்பதற்கு ப்ரமாணம், ஸ்ரீவிபு (2-7-97) - கோடி கோடி சதாநிச - இப்படிப்பட்ட அண்டங்கள் கோடிகோடியாக உள்ளன – என்பது ஆகும். (எனது ஆவியுள் மீது ஆடி) - “எனது ஆவி மீது” என்பதற்கு இரண்டுவிதமாகப் பொருள் கூறுகிறார். முதல் பொருளில் “மீது” என்பதற்கு, “மிகுதி மற்றும் குறைவு இல்லாமல்” என்று கூறுகிறார்; எனது இதயத்தில் எந்தக் குறைவும் இன்றி ஸஞ்சரித்தல். இரண்டாவது பொருளில் “மீது” என்பதற்கு, “மேலாக மற்றும் புறம்” என்று பொருள் கூறுகிறார்; அதாவது எனது ஆத்மாவின் உள்ளிலும் புறத்திலும் ஸஞ்சரித்தல். (உருக்காட்டாதே ஒளிப்பாயோ) – இதனைக் கேட்ட ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், “நம்முடைய வடிவத்தைக் காண இயலவில்லை என்றால் என்ன? நம் குணங்களை எண்ணிப் பிழைத்திருக்க முடியாதோ”, என்பதற்கு விடை கூறுகிறார்; குணங்களுடைய ஞானம் கொண்டு உயிர் தாங்க இயல்பவர்கள் மட்டுமே, வடிவத்தைக் காண இயலாதபோதிலும் தரிக்க இயலும் அல்லவோ?

6-9-6. பாயோர் அடி வைத்து அதன் கீழ்ப் பரவை நிலம் எல்லாம்
தாய் ஓர் அடியால் எல்லா உலகும் தடவந்த
மாயோன் உன்னைக் காண்பான் வருந்தி எனை நாளும்
தீயோடு உடன் சேர் மெழுகாய் உலகில் திரிவேனோ

பொருள் - ஓர் அடியைப் பரப்பி வைத்து, அதன் கீழ் ஸமுத்ரங்களால் சூழப்பட்ட அனைத்து லோகங்களும் உள்ளது போன்று தாவி அளந்து, மற்றொரு திருவடியால் மேல் லோகங்கள் முழுவதையும் அளந்து கொண்ட வியக்க வைக்கும் செயல் புரிந்தவனே! உன்னைக் காணவேண்டும் என்று எப்போதும் துக்கம் அடைந்து, தீயின் அருகில் சேர்ந்த மெழுகின் இயல்பை அடைந்து இந்த நாட்டில்

திரிவேனோ? அதாவது முடியவும் இயலாமல், உறுதியாக இருக்கவும் முடியாமல் தவிப்பேனோ?

அவதாரிகை – “உம்முடைய அபேக்ஷிதம் செய்யக் கடவோம். அதில் ஒரு குறையில்லை; ஆனாலும், ப்ரயோஜநம் உம்மதான பின்பு நீரும் சில யத்நம் பண்ண வேணுங் காணும்” என்ன; “இந்த மர்யாதை என்று தொடங்கிக் கட்டிற்று”, என்கிறார். அன்றியே, காண்கைக்குத் தாம் அயோக்யர் என்று உபேக்ஷித்தானாக நினைத்து, “யோக்யதாயோக்யதை பாராதே எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்த உன்னாலே யிழக்கப்படுவார் உண்டோ?”, என்கிறாராகவுமாம்.

விளக்கம் – ஸர்வேஸ்வரன் ஆழ்வாரிடம், “உமது விருப்பத்தை நான் பூர்த்தி செய்வோம். அதில் எந்த ஒரு தடையும் இல்லை. ஆனால் அவ்விதம் செய்யும்போது, அதற்கான பலனை நீவிர் அனுபவிக்க உள்ளதால், அதற்கு நீரும் சில முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்”, என்றான். இதற்கு ஆழ்வார், “இப்படி ஓர் எதிர்பார்ப்பு எப்போதிலிருந்து உனக்குத் தொடங்கியது?”, என்றார். அல்லது, “இவன் பார்வையில் நாம் அயோக்யன் என்று இவன் எண்ணுவான் என்பதாகப் பலரும் சிந்திப்பார்கள் என நீ நினைத்தாய். ஆகவே தகுதி உள்ளவர்கள் மற்றும் தகுதி அற்றவர்கள் என்று வேறுபாடு ஆராயாமல், அனைவருடைய தலைகளிலு த்ரிவிக்ரமனாக வந்து உனது திருவடிகளை வைத்தாய். இப்படிப்பட்ட உன்னால் விடுபட்டவர்கள் என்று யாரும் இருப்பாரோ?”, என்கிறார்.

.

வ்யாக்யானம் - (பாயோரடி வைத்து) சேதநர் தலையிலே திருவடிகளை வைக்கிறபோது, அவர்கள் எவ்வளவு வருந்தினார்கள்? வஸிஷ்ட சண்டாள விபாகம் பாராதே வெறும் உன் க்ருபையாலே செய்தருளினாய் அத்தனையன்றோ! (பாயோரடி வைத்து) ஓரடியைப் பாவி வைத்து. (அதன் கீழ்) அத்திருவடியின் கீழே. (பரவை நிலமெல்லாம் தாய்) கடல் சூழ்ந்த பூமிப் பரப்படங்கலும், தாவி - அளந்தென்றபடி. ஸங்கல்பத்தாலே செய்தானல்லனே, திருவடிகளைப் பரப்பிப் பின்பிறே யளந்து கொண்டது; “பரக்க வைத்து அளந்து கொண்ட பற்பபாதனி”றே!

விளக்கம் - (பாயோரடி வைத்து) - அளவு கடந்த உபாயங்களைக் கொண்டு சேதநர்கள் பலரும் உன்னை அடைய இயலாமல் வருந்தினார்களோ? இல்லையே!

ஆயினும் உனது திருவடிகளை அவர்கள் தலையில் வைத்தாய். வசிஷ்டர் மற்றும் சண்டாளர் என்ற வேறுபாடு ஆராயாமல் உனது க்ருபையை மட்டுமே கொண்டு நீ அருளினாய் அல்லவோ? (பாயோரடி வைத்து) – ஓர் அடியைப் பரப்பி வைத்து. (அதன் கீழ்) - அந்தத் திருவடியின் கீழே. (பரவை நிலமெல்லாம் தாய்) - ஸமுத்ரங்களால் சூழப்பட்ட முழு பூமியையும். (தாவி) – “அளந்த” என்று பொருள். தனது ஸங்கல்பம் அல்லது எண்ணத்தால் மட்டும் செய்யவில்லை, திருவடிகளை உயர்த்தி அதன் பின்னர் அல்லவோ அளந்தான்? இவ்விதம் பரப்பி அளந்ததற்கு ப்ரமாணம் திருச்சந்தவிருத்தம் (32) - பரக்க வைத்து அளந்து கொண்ட பற்பபாதன் - என்பது ஆகும்; இப்படிப்பட்ட தாமரைத் திருவடிகள் கொண்டவன் அல்லவோ?

வ்யாக்யானம் - (ஓரடியாலெல்லாவுலகுந் தடவந்த) மற்றைத் திருவடியாலே ப்ரஹ்ம லோகத்தளவும் சென்று ஸ்பர்சித்த. (எல்லாவுலகும்) நடுவுள்ள லோகங்களெல்லாம். (தட வந்த) தென்றல் உலாவினாற்போலே. (மாயோன்) தன்னுடைமையை ஸ்பர்சிக்கைக்குத் தான் வ்யாமோஹம் பண்ணுமவன். (உன்னைக் காண்பான் வருந்தி) என்னளவில் வந்தவாறே என்னை இரப்பாளனாக்குகிறாயோ? அத்தலை யித்தலையாயிற்றோ?

விளக்கம் - (ஓர் அடியால் எல்லா உலகுந் தடவந்த) - மற்றொரு திருவடியால் ப்ரஹ்மலோகம் முடியச் சென்று ஸ்பர்சித்த. (எல்லா உலகும்) - நடுவில் உள்ள அனைத்து லோகங்களும். (தட வந்த) - தென்றல் உலவியது போன்று. (மாயோன்) – தனது உடைமைகளை ஸ்பர்சிப்பதற்குத் தான் மயக்கம் கொள்பவன். (உன்னைக் காண்பான் வருந்தி) - “என் அளவில்” என்று தொடங்கி காணப்படும் இரண்டு வாக்கியங்கள் மூலம் தனது துயரத்தைக் கூறுகிறார். அனைவரிடமும் நீ யாசகம் பெற்ற பின்னர், என்னிடம் வரும்போது மட்டும் என்னை யாசிக்கும்படிச் செய்கிறாயோ? அவர்களிடம் யாசகம் கேட்டு நீ என்னை உன் நிலையில் வைத்தாயோ?

வ்யாக்யானம் - (எனை நாளும்) அநேக காலம். “மயர்வற மதிநலமருளி”ய பின்பு ப்ராப்தியளவும் செல்ல இடையிலுண்டான நாலு நாளும், “அவனெதிர் சூழல் புக்குத் திரிந்த” நாளோபாதி பரப்பாய்த் தோற்றுகிறபடி. (தீயோடுடன் சேர் மெழுகாய்) அக்நியிலே ப்ரவேசித்துக் கரிந்து போகவும் பெறாதே, தூரவிருந்து அழியாதிருக்கவும் பெறாதே, உருகுவது வலிப்பதாகிறபடி. மாநஸாநுபவத்தாலே

யுருகுவது வலிப்பது, பாஹ்ய ஸம்ச்லேஷம் பெறாமையாலே உருகுவது வலிப்பதாய்ச் செல்லுகிறபடி. நசை வலிக்கப் பண்ண, ஆசையுருகப் பண்ணச் செல்லுகிறபடி. (உலகில் திரிவேனோ) ஒன்றில் ஜீவித்தல், ஒன்றில் முடிதல் செய்யப் பெறாதே, குளிர்ந்த வழியில்லாத தேசத்திலே யாதநா சரீரம்போல நானாருவன் இங்ஙனே திரிவதே!

விளக்கம் – (எனை நாளும்) - எல்லையற்ற, தொடக்கம் அறியாத காலங்கள். ஆழ்வார் இங்கு சில காலம் மட்டுமே உள்ளவர்; ஆயினும் ஏன் "பல காலம்" என்றார்? இதற்கு விடை கூறுகிறார்; "மயர்வற மதிநலம் அருளப்" பெற்ற பின்னர், பேற்றின் அளவு முடிய செல்வதற்கு இடைப்பட்ட காலங்கள், "நான்கு நாள்கள்" என்று கூறலாம்படி குறுகியதாக உள்ளபோதிலும், அவன் திருவாய்மொழி (2-7-6) - எதிர் சூழல் புக்கு திரிந்த - என்று கூறுவதற்கு ஏற்ப இருந்த நாள்கள் போன்று மிகவும் பரந்து காணப்படுகின்றன. (தீயோடுடன் சேர் மெழுகாய்) - அக்னியில் சேர்ந்து எரிந்து போகவும் செய்யாமல், அதிலிருந்து சற்று தள்ளி இருந்து அழிவதும் அடையாமல், உருகுவதும் இறுகுவதும் என்பதாக உள்ள மெழுகு போன்று. மனதில் ஏற்படும் அனுபவம் மூலம் முழுவதும் உருகுவதும் இறுகுவதும் என்ற நிலையானது, நேரில் காணுதல் என்பது ஏற்படாமல் உள்ளதால் உருகுவதும் இறுகுவதும் என்பதைக் கூறுவதாகிறது. மனதால் ஏற்படும் அனுபவம் என்பது, ஒரு குணத்தை அனுபவிக்கும்போது, அது வேறு ஒரு குணத்தின் மீது ஆசையை உண்டாக்கும்; அப்போது அந்த வேறு ஒரு குணத்தின் அனுபவம் கிடைக்காமல் உள்ளதால், உருகுதல் மற்றும் அது கிட்டியவுடன் தரித்தல் என்பதாக உள்ள நிலை. நேரடியாக அர்ச்சாவதாரத் திருமேனியைக் காணும்போது அவன் கிட்டப் பெறாமையால் ஏற்படும் ஆசையால் உருகுதல்; "ஒரு வேளை காண இயலுமோ" என்ற சாபலத்தை ஏற்படுத்தி, அத்தகைய மேன்மையைக் காண இயலாததால் இறுகுவது என்பதாகும். அதாவது "காண இயலுமோ" என்ற சாபலம் இறுக்குகிறது, ஆசையானது உருக்குகிறது. (உலகில் திரிவேனோ) - ஒரு நிலையில் பிழைத்தலும், மற்றொரு நிலையில் முடிதலும் செய்ய இயலாமல். குளிர்ந்த வழி அறியாத தேசத்தில், நரகத்தை அனுபவிப்பதற்கு ஏற்ற சரீரம் கொண்டவனாக நான் ஒருவன் இவ்விதம் திரிகின்றேனே!

6-9-7. உலகில் திரியும் கரும கதி ஆய் உலகம் ஆய்
உலகுக்கே ஓர் உயிரும் ஆனாய் புற அண்டத்து
அலகில் பொலிந்த திசை பத்து ஆய அருவேயோ
அலகில் பொலிந்த அறிவிலேனுக்கு அருளாயே

பொருள் - இந்த உலகில் பரந்து நிற்கும் கார்ய வடிவத்தில் உள்ள உபாயங்களுக்கு நிர்வாஹகனாகவும்; அந்த உபாயங்களைக் கைகொள்ளும் கர்த்தாக்களாகிய லௌகீகத்தில் உள்ளவர்களுக்கு அவர்களுடைய அந்தராத்மாவாக நின்று அவர்களைச் செயலாற்றும்படி செய்பவனாகவும்; இவ்விதம் செயல் புரியத் தூண்டுபவனாக மட்டும் அல்லாமல் அனைத்து லோகங்களுக்கும் ஒரே ஆத்மாவாகவும், அண்டங்களுக்கு மேலே உள்ளவர்களாகிய எண்ணிக்கை இல்லாதபடி, ஞானதர்மம் மூலம் பத்து திசைகளிலும் வ்யாபித்து நிற்கும் முக்தாத்மாக்களை ப்ரகரமாகக் கொண்டவனாகவும் உள்ளவனே! எண்ணிறந்த அறிவுக் கேட்டை உடையவன் என்பதால், உன்னைப் பெறுவதற்கான வழி அறியாத எனக்கு, "உன்னை அடையும் உபாயமும், அந்த உபாயத்தால் அடையப்படும் பேறும் நீயே" என்பதாக எனக்கு க்ருபை செய்தருளவேண்டும். "அருவேயோ" என்பதில் உள்ள "ஓ" என்ற அசைச்சொல்லானது, துயரத்தின் மிகுதியால் வந்த அழைப்பைக் காண்பிக்கிறது.

அவதாரிகை – "'உலகில் திரிவேனா' என்கிற உறைப்பாலுண்டான ஸ்வாதந்த்ர்யம் உம்முடைய தலையிலே கிடந்ததே!" என்ன; "ஸாதநமும் ஸாதகரும் த்வததீநமான பின்பு, இவ்வாற்றாமை எனக்கு ஸ்வரூபமா யந்வயிக்குமித்தனை யன்றோ?" என்கிறார். அன்றியே, "பேறு உம்மதான பின்பு நீரும் சிறிது யத்நம் பண்ண வேணுங் காணும்" என்ன; "ஸர்வமும் த்வததீனமாயிருக்க, அதுக்குப் புறம்போ நான் என் கார்யம் செய்கைக்கு?" என்கிறாராகவுமாம்.

விளக்கம் – ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், "நீவிர் 'உலகில் திரிவேனோ' என்று ஆற்றாமையால் உண்டான பதற்றம் காரணமாக, சுதந்திரமாக உள்ளது போன்ற தொனியில் கூறுகிறீரே!", என்றான். இதற்கு ஆழ்வார், "உபாயங்களும், அவற்றைக் கைக்கொளும் சாதகர்களும் உனது வசம் என்றுள்ள பின்னர், இந்த

ஆற்றாமையானது எனக்கு ஸ்வரூபமாக வந்து சேரும் அல்லவோ?", என்கிறார். அல்லது, "நீவிர் அடைய உள்ள பேறு, உம்மையே வந்து சேரும் என்பதால், அதனைப் பெற நீரும் சிறிது முயற்சிக்க வேண்டும் அல்லவோ?", என்றான். இதற்கு ஆழ்வார், "அனைத்தும் உன் வசப்பட்டு உள்ளபோது, அதற்குப் புறம்பாக நான் என்ன கார்யம் செய்யமுடியும்?", என்கிறார் என்றும் கூறலாம்.

வ்யாக்யானம் - (உலகில் திரியும் கரும கதியாய்) லோகத்தில் பரிமாறுகிற கர்மமாகிற ஸாதநமாய். உன்னையொழிய பலப்ரதாநம் பண்ணவல்லதொன்றுண்டோ? (உலகமாய்) அநுஷ்ட்டாதாக்களோதான் ஸ்வதந்த்ரராயிருக்கிறார்? உலகமென்பது உயர்ந்தோர் மாட்டிறே; லோகத்திலுள்ளார்க்கு என்றும் வருமிறே. (உலகுக்கேயோருயிருமானாய்) ஒரு சரீரத்தை ஒரு சேதநன் ஆத்மாவாய் அபிமாநித்திருக்குமாபோலே, ஸகல பதார்த்தங்களுக்கும் ஏகாத்மாவானவனே! "அந்த: ப்ரவிஷ்டச்சாஸ்தா" பலபூதனான தானே, கர்த்தாவும் கர்மமும் உபகரணங்களுமாயிருக்கை. இரண்டும் உன் தலையிலே கிடந்தால், உன்னையொழிய எங்ஙனே நான் ஜீவிக்கும்படி?

விளக்கம் – (உலகில் திரியும் கரும கதியாய்) - இந்த லோகத்தில் எங்கும் இயங்கியபடி உள்ள கர்மம் என்ற உபாயங்கள். நீ அல்லாமல், பலனைத் தரவல்ல வேறு ஏதேனும் இந்த உலகில் உள்ளதா? (உலகமாய்) - அந்த உபாயங்களைக் கைக்கொள்பவர்கள், இந்த உலகத்தில் சுதந்திரமாக உள்ளனரோ? தொல்காப்பியம் - உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே - அல்லவோ? இந்த உலகத்தில் உள்ளவர்களுக்கு என்றும் வரும் அல்லவோ? (உலகுக்கே ஓர் உயிரும் ஆனாய்) - கர்மமும் கர்த்தாவும் அவனே என்று உள்ளதன் காரணம் என்ன என்பதற்கு "சரீரம் – சரீரி" என்ற உறவுமுறை ஆகும் என்பதைக் கூறத் திருவுள்ளம் கொண்டவராக விடை அளிக்கிறார்; ஒரு சரீரத்தை, ஒரு சேதநன், தனது ஆத்மாவாக எண்ணியபடி உள்ளது போன்று, அனைத்து வஸ்துக்களுக்குள்ளும் ஒரே ஆத்மாவாக உள்ளவனே! இதனை உபநிஷத் – அந்த: ப்ரவிஷ்டச்சாஸ்தா - அனைத்தின் உள்ளிலும் புகுந்து அவற்றை நியமிப்பவன் – என்றது. அனைத்து உபாயங்களுடைய பலனாக உள்ள தானே, "கர்த்தாவும், கர்மமும்,

உபகரணங்களும்" என்பதாக உள்ளான். கர்மமும் கர்த்தாவும் உன் வசப்பட்டு உள்ளபோது, உன்னை விடுத்து நான் எவ்விதம் உயிர் தரிப்பேன்?

வ்யாக்யானம் - (புறவண்டத்து) அண்டாத்பஹி: என்றபடி. (அலகில் பொலிந்த திசை பத்தாய அருவேயோ) அஸங்க்யேயராய், எம்பெருமான் ஸ்வரூபத்தாலே வ்யாபிக்குமா போலே ஜ்ஞானத்தாலே பத்துத் திக்கிலும் வ்யாபித்திருப்பாராய் ரூபி த்ரவ்யம்போலே கண்ணுக்கு விஷயமன்றிக்கே அரூபியாயிருக்கிற ஆத்மாக்களுக்கு நிர்வாஹகனானவனே! முக்தரோதான் ஸ்வதந்த்ரராயிருக்கிறார்? அங்கும் பத்துத் திக்காயிருக்குமோ? என்னில்; இங்கேயிருந்து அநுஸந்திக்கிற இவர்க்குச் சொல்லத் தட்டில்லையே. அங்ஙனன்றிக்கே, முக்தர் லீலாவிபூத்யநுஸந்தாநம் பண்ணும்போது இங்குள்ளபடியே ப்ரதிபத்தி பண்ணுவர்களிறே. (அலகில் பொலிந்த அறிவிலேனுக்கு) பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளைப் பரிச்சேதிக்கிலும் தம் அறிவு கேடு பரிகணிக்கப் போகாதென்கிறார். "மயர்வற மதிநலமருளப் பெற்ற"வர் வார்த்தையிறே! (அருளாயே) பரிகரமுண்டான பின்பு அருளக்குறையென்? "அநுத்தமம் பாத்ரமிதம் தயாயா:" என்னுமாபோலே.

விளக்கம் - (புறவண்டத்து) - "அண்டத்திற்கு வெளியே" என்று கருத்து. (அலகில் பொலிந்த திசை பத்தாய அருவேயோ) - எண்ணிக்கை அற்றவர்களாக; ஸர்வேச்வரன் எவ்விதம் தனது ஸ்வரூபத்தால் எங்கும் வ்யாபித்தபடி உள்ளனோ அது போன்று, தங்களுடைய ஞானம் மூலம் பத்து திசைகளிலும் வ்யாபித்தவர்களாக; கண்களுக்குப் புலப்படும் பொருள்கள் போன்று அல்லாமல், கண்களுக்குப் புலப்படாதபடி உள்ளவர்களாக இருக்கும் ஆத்மாக்களுக்கு நிர்வாஹகனே! முக்தர்கள் சுதந்திரமாக உள்ளனர்; ஆனால் அவர்கள் உள்ள பரமபதத்திலும் பத்து திசைகள் இருக்குமோ என்றால், இவர் இங்கிருந்து நினைப்பதால், இவ்விதம் கூறுவதில் தோஷம் இல்லை. அல்லது, முக்தர்கள் இந்த உலகை எண்ணும்போது, இங்குள்ளவர்கள் இந்த உலகை எவ்விதம் நினைப்பார்களோ அதனைப் போன்றே எண்ணுவார்கள் அல்லவோ? (அலகில் பொலிந்த அறிவிலேனுக்கு) - ஸர்வேச்வரனுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை அளவிட முடிந்தால் கூட, தனது அறிவுக்கேட்டை அளவிட இயலாது என்கிறார். இவர் "அனைத்தும் அறிந்தவர்" என்றுள்ளபோது, "அறிவிலேனுக்கு" என்பது எப்படி? இதற்கு விடை, அவர் அவ்விதம் உள்ளபோதிலும், "மயர்வற மதிநலம் அருளப்பெற்ற"வருடைய வாக்கு என்றால், சரியாகவே இருக்கும் அல்லவோ?

(அருளாயே) - “தன்னிடம் கைம்முதல் இல்லை” என்பதான சிந்தனை ஏற்பட்ட பின்னர், நீ எனக்கு க்ருபை செய்பவதற்கு என்ன குறை உள்ளது? ஸ்தோத்ரரத்னம் (24) - அநுத்தமம் பாத்ரமிதம் தயாயா: – உன் அருளுக்குச் சிறந்த பாத்திரம் - என்பது காண்க.

6-9-8. அறிவிலேனுக்கு அருளாய் அறிவார் உயிர் ஆனாய்
வெறி கொள் சோதி மூர்த்தி அடியேன் நெடுமாலே
கிறி செய்து என்னைப் புறத்திட்டு இன்னம் கெடுப்பாயோ
பிறிது ஒன்று அறியா அடியேன் ஆவி திகைக்கவே

பொருள் - அறிவு நிறைந்த மேன்மையானவர்களுக்கு உயிராக உள்ளவனே! அவர்களை உயிர் பிழைக்கச் செய்யும்படியான அனைத்து நறுமணங்கள் பொருந்திய தேஜஸ் நிறைந்த திருமேனி கொண்டவனே! என்னை உனக்கு மட்டுமே அல்லவோ வேறு யாருக்கும் வசப்படாதபடி உன்னிடம் சாபலத்தை ஏற்படுத்திய வ்யாமோஹம் நிறைந்தவனே! அத்தகைய உனது வடிவத்தை அனுபவிப்பதற்கான வழியை அறியாத எனக்கு உனது க்ருபையால், அனுபவிக்கும்படிச் செய்யவேண்டும். இவ்விதம் நீ செய்யாமல், உன்னைத் தவிர எனது நற்கதிக்கு வேறு எதனையும் அறியாதபடி, நீ கட்டளை செய்து வைத்தபடியான ஸ்வரூபம் கொண்ட என்னுடைய நெஞ்சமானது கலங்கும்படியாக, உன்னைக் குறித்த ருசியை ஏற்படுத்தி, ஆயினும் அதற்கு ஏற்ற அனுபவத்தை உண்டாக்காமல், உனது வடிவழகின் மேன்மையை அறிந்த என்னை மற்ற விஷயங்களில் அகப்படுத்தி, எல்லையற்ற காலம் உன்னை இழந்து போதாது என்று, உன்னை அடையவேண்டும் என்ற ஆசை பிறந்த இன்றும், கெடுக்க வழி தேடுகிறாயோ?

அவதாரிகை – “அருளாய்” என்ற வாயோடே வந்தருளக் கண்டிலர்; தன்பக்கல் நின்றும் பிரித்து என்னைக் கைவிடப் பார்த்தானாகாதே யென்கிறார்.

விளக்கம் – “அருளாய்” என்று கூறினார். அதன் பின்னர் அவன் உடனே வரவில்லை என்று பார்த்தார். ஆகவே, தன்னிடமிருந்து என்னைப் பிரித்துக் கைவிடப் பார்த்தானோ என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் – (அறிவிலேனுக்கருளாய்) "நின்னருளே புரிந்திருந்தேன்" என்னுமாபோலே உன்னருளொழிய வேறொன்றறியாத எனக்கு அருளவேணும். "அவ்வருளல்லன வருளுமல்ல" என்றிறே இவரிருப்பது. "வையகத்துப் பல்லாரருளும் பழுதி"றே. "பொய்ந்நின்ற ஞான"த்தையுடையவெனக்கு ஞானப்பிரானான நீ க்ருபை பண்ணி யருளாய்.

விளக்கம் – (அறிவிலேனுக்கருளாய்) – பெரியாழ்வார் திருமொழி (5-4-1) – நின் அருளே புரிந்திருந்தேன் - என்பதற்கு ஏற்ப, உனது க்ருபையைத் தவிர்த்து வேறு எதனையும் அறியாத எனக்கு க்ருபை செய்யவேண்டும். ஆனால் வேறு எந்த ஒரு க்ருபையையும் இவர் அறியாரோ என்பதற்கு விடை அளிக்கிறார். திருவாய்மொழி (9-9-6) – அவ்வருள் அல்லன அருளும் அல்ல - என்று அல்லவோ இவர் உள்ளார்? ஆனால் மற்றவர்களுடைய க்ருபையானது தகுந்த சாதனம் இல்லையோ என்பதற்கு, "இல்லை" என்று கூறி ப்ரமாணம் காண்பிக்கிறார்; முதல் திருவந்தாதி (15) - வையகத்துப் பல்லார் அருளும் பழுது - என்பது காண்க. அதாவது, திருவிருத்தம் (1) – பொய்ந்நின்ற ஞானம் - என்பதாக உள்ள எனக்கு, திருவிருத்தம் (99) – ஞானப்பிரான் - என்று உள்ள நீ க்ருபை செய்தருளாய்.

வ்யாக்யானம் - (அறிவாருயிரானாய்) அறிவார்க்கு உயிரானவனே என்னுதல்; அறிவாரை உயிராகவுடையவனே என்னுதல். "ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்" என்கிறபடியே, "த்விதீயம் மேந்தராத்மாநம்" என்கிறபடியே. (வெறிகொள் சோதி மூர்த்தி) அருளாதொழிந்தாலும் விடவொண்ணாத வடிவழகு; "ஸர்வகந்த:" என்னுமதிறே. பரிமளத்தை யுடைத்தாய், நிரவதிகமான தேஜஸ்ஸையுடைத்தான வடிவழகை யுடையவனே! (அடியேன் நெடுமாலே) எனக்கு இப்போது எட்டாதிருக்கிறவனே என்னுதல்; வடிவழகைக் காட்டி எனக்கு வ்யாமோஹத்தை விளைத்தவனே என்னுதல்.

விளக்கம் – (அறிவார் உயிர் ஆனாய்) - அறிந்தவர்களுக்கு உயிரானவனே! அல்லது அறிந்தவர்களை உயிராகக் கொண்டவனே! இதற்கு ப்ரமாணம் கூறுகிறார்; கீதை(18-7) - ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் - ஞானி எனக்கு உயிர் போன்றவன் என்பது எனது எண்ணம் - என்றும், அயோத்யாகாண்டம் (4-43) - த்விதீயம் மேந்தராத்மாநம் - எனது இரண்டாவது ஆத்மாவாக உள்ள உன்னை - என்றும் கூறப்பட்டது காண்க. (வெறிகொள் சோதி மூர்த்தி) - அவன் க்ருபை செய்யாமல்

இருந்தாலும், விட இயலாத வடிவழகு. அதாவது உபநிஷத்தில், “ஸர்வகந்த: - அனைத்து நறுமணங்களும்” என்பதற்கு ஏற்ப பரிமளம் நிறைந்ததாகவும், எல்லையற்ற தேஜஸ் பொருந்தியதாகவும் உள்ள வடிவழகு கொண்டவனே! (அடியேன் நெடுமாலே) – “மால்” என்பது பெருமை, “நெடு” என்பது பெருமை என்று கொண்டு, எனக்கு இப்போது எட்டாமல் உள்ளவனே என்கிறார். அல்லது தனது வடிவழகைக் காண்பித்து எனக்கு மயக்கத்தை ஏற்படுத்தியவனே!

வ்யாக்யானம் - (கிறி செய்து) நீ இப்போது உதவாமையாலே, முன்பு செய்தவையெல்லாம் விரகடித்தாயென்று தோற்றா நின்றது கிடாய்! (என்னைப் புறத்திட்டு) பிராட்டியை அசோகவநிகையிலே வைத்தாற்போலே, பகவத் குணங்கள் நடையாடாத சப்தாதி விஷயங்கள் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே பொகட்டு. (இன்னங் கெடுப்பாயோ) முன்பு இழந்தது போராதோ? “ஸம்ஸாரம் த்யாஜ்யம்” என்றும், “பகவத் குணங்கள் நன்று” என்றும் அறிந்த பின்பும் கெடுப்பாயோ? “புத்தி நாசாத் ப்ரணயதி” இறே. (பிறிதொன்று இத்யாதி) அநந்யகதியாய் அநந்யபரனாயிருக்கிற என்னை மநஸ்ஸு கலங்கும்படி கிறிசெய்து என்னைப் புறத்திட்டு இன்னங் கெடுப்பாயோ?

விளக்கம் – (கிறி செய்து) – நீ இப்போது உதவி செய்யாமல் உள்ளதால் முன்பு செய்தவை அனைத்தையும் நீயே அகற்றினாய் என்று தோன்றுவதாக நீ உள்ளாய்; இங்கு “விரகு அடித்தாய்” என்பது “எனக்கு ஸம்ஸாரத்திலும் பொருந்தாமல், நீயும் உனது திருமுகத்தைக் காண்பிக்காமல், என்னைத் தவித்தபடிச் செய்யப் பார்த்தாய்” என்பதாகிறது. (என்னைப் புறத்திட்டு) - சீதையை அசோகவனத்தில் வைத்தது போன்று, பகவத் குணங்கள் கலக்காமல் உள்ளதான, இந்த்ரிய விஷயங்களில் எப்போதும் நின்றுள்ளதான, ஸம்ஸாரத்தில் வைத்தாய். (இன்னங் கெடுப்பாயோ) – இதுவரை நான் உன்னை இழந்தது போதாதோ? “ஸம்ஸாரம் கைவிடத்தக்கது” என்றும், “பகவத் குணங்களே கொள்ளத் தக்கவை” என்றும் அறிந்த பின்னரும், என்னைக் கெடுப்பாயோ? உலக விஷயங்கள் மட்டுமே நிறைந்துள்ள ஸம்ஸாரத்தில் வைத்தால் என்ன கெடுதல் உண்டாகும் என்பதற்கு விடை அளிக்கிறார்; கீதை (2-63) – புத்தி நாசாத் ப்ரணயதி - புத்தி அழிந்து அனைத்தும் அழிகிறது – என்பது காண்க. (பிறிதொன்று இத்யாதி) - மற்ற கதி ஏதும் இல்லாதவனாகவும், மற்ற யாருக்கும் வசப்படாதவனாகவும் உள்ள என்னை, மனம்

கலக்கும்படியாகச் செய்ய புரிந்து, என்னைப் புறந்தள்ளி, மேலும் கெடுக்க எண்ணுகிறாயோ?

6-9-9. ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம்
பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ
தாவி வையம் கொண்ட தடம் தாமரை கட்கே
கூவிக் கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ

பொருள் - நெஞ்சம் கலங்கும்படியாக, ஐந்து இந்த்ரியங்களும் "தா, தா" என்று பீடிக்கும் அற்பமான ஸாரமாகிய உலக விஷயங்கள் பலவிதங்களில் வெளிப்படுத்தி, இவற்றை விலக்கவல்ல சக்தி கொண்ட நீ, எல்லையில்லாத அயோக்யனும் பாபியும் ஆகிய என்னை, இந்த நித்யமான துக்கம் நிறைந்த இடத்தில் வசிக்கும்படிச் செய்து, முடிக்க எண்ணுகிறாயோ? இந்தப் பூமியானது வேறு யாருக்கும் உடைமையாகாதபடி, உனக்கே சொந்தமாகிற விதத்தில் அளந்து எடுத்துக் கொண்ட, இனிமை பொருந்திய திருவடித் தாமரைகளில் நான் எப்போதும் பொருந்தியிருக்கும்படி என்னை உன்னிடம் அழைத்துக் கொள்ளும் காலமானது, "மற்ற விஷயங்களின் பார்வை அழிவிற்குக் காரணம்" என்ற நிலை உள்ளபோதிலும், விரைவாகக் குறுகாதோ?

அவதாரிகை – "உம்மை இங்கு கெடுத்ததென்?" என்ன; "கண்ட காட்சியிலே இழுத்துக் கொள்ளக் கடவதான விஷயங்கள் பரிமாறுகிறவிடத்தே வைத்தாயாகில், இனிக் கெடுக்கையென்று ஒன்றுண்டோ?", என்கிறார். "என்னை இங்கே வைத்தபோதே, குழியைக் கல்லி மண்ணையிட்டு அமுக்கப் பார்த்தாயன்றோ?" என்கிறார். "தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் க்ஷிபாமி" என்னும்படியே.

விளக்கம் - ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், "நாம் உம்மைக் கெடுக்க எண்ணுவதாகக் கூறுகிறீர். நாம் உம்மை இங்கு எப்போது கெடுத்தோம்?", என்றான். இதற்கு ஆழ்வார், "எந்தக் காட்சியை காண்கிறோமோ அதில் இழுத்துக் கொள்ள வல்லதான விஷயங்கள் நிறைந்த இந்தப் பூமியில் வைத்துள்ளாய். இதனை விட இனி என்னைக் கெடுப்பதற்கு வேறு ஒன்று உள்ளதோ? என்னை நீ இங்கு வைத்து நேரத்திலேயே குழியைத் தோண்டி, அதில் மண்ணை நிரப்பி என்னை அழுத்தப்

பார்த்தாய் அல்லவோ?", என்றார். ஆனால் "ஸம்ஸாரத்தில் வைத்தல்" என்பது அநுக்ரஹம் செய்வதன் எதிர்த்தட்டாகுமோ என்றால், கீதை (16-19) - தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்! க்ஷிபாமி - என்பது காண்க.

வ்யாக்யானம் - (ஆவி திகைக்க) இந்த்ரியங்களுக்குக் கந்தமான மநஸ்ஸு கலங்க. (ஐவர் குமைக்கும்) சேதந ஸமாதியாலே சொல்லுகிறது, நலிவின் மிகுதியாலே. ஒரு துர்ப்பலனைப் பற்றி ஐஞ்சுபடர் நலியுமாபோலே, "என் விஷயத்தைக் காட்டு" என்று தனித்தனியே நலிகிறபடி. இப்படி நலிந்தாலும் ஆஸ்வாதமுண்டாகிலாமிறே. (சிற்றின்பம்) முள்ளிப்பூவில் தேன் போலே, "அற்ப சாரங்களி"றே. தேவரையகற்ற, வேண்டுவதுண்டாய், அநுபவிக்கலாவது ஒன்று இன்றிக்கே யிருக்கை.

விளக்கம் – (ஆவி திகைக்க) - இந்த்ரியங்களுக்கு அடிப்படையாக உள்ள மனம் கலங்கும்படி. (ஐவர் குமைக்கும்) - சேதநராக நிற்பதால் கூறுகிறார். குறிப்பாக நலிவின் மிகுதி காரணமாக. தான் ஒருவராக உள்ளபோதிலும், ஐந்து இந்த்ரியங்களும் சேர்ந்து நலிவதற்கான உதரணம் கூறுகிறார்; தவிப்பவன் ஒருவனை ஐந்து பேர் சேர்ந்து துன்புறுத்துவது போன்று, "எனக்கான விஷயத்தை எனக்குக் காண்பிப்பாயாக" என்று ஒவ்வொரு இந்த்ரியமும் தனித்தனியாக துன்புறுத்தியபடி உள்ளன. ஆனால் இவ்விதம் இவை துன்புறுத்தினாலும் சுவை ஏற்படுகிறது அல்லவோ என்பதற்கு விடை தருகிறார். ஆனால் சுவை இல்லையோ என்றால், முள்ளிப்பூவில் உள்ள தேன் போன்றதாக இருக்கிறது. அதாவது "அற்ப சாரம்" அல்லவோ? அவை அற்பமாக இருந்தாலும், "உள்ளது" என்ற நிலை அவற்றுக்கு உள்ளது அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; உன்னை என்னிடமிருந்து அகற்றத் தேவையானவற்றைக் கொண்டவையாகவும், அனுபவத்திற்கு ஏற்ற ஏதும் இல்லாததாகவும் உள்ளன.

வ்யாக்யானம் - (பாவியேனை) அந்தமில் பேரின்பத்துக்கு இட்டுப் பிறந்த நான் சிற்றின்பத்திலே அந்வயிக்கும்படியாவதே. "வீவிலின்பமிகவெல்லை நிகழ்ந்தனன்" என்றவரிறே இங்ஙனே சொல்லுகிறார். (பல) ஒன்றிலே கால் தாழப் பண்ணவல்ல விஷயமில்லையே. (நீ காட்டிப் படுப்பாயோ) ரக்ஷகனான நீ காட்டி முடிக்கப் பார்க்கிறாயோ? (காட்டிப் படுப்பாயோ) நாட்டார் "காணாவிடிற் பிழையோம்" என்றிருக்கிற விஷயம் இவர்க்கு தர்சநமாத்ரத்திலே மோஹிக்கும்படியா யிருக்கிறதிறே. அசுணமாவென்று சில பக்ஷிகளுண்டு; அவை பிடிகொடாது

ஒன்றுக்கும்; அவை பிடிக்க நினைத்தார் முற்படப் பாடுவார்கள்; அது கேட்டு நெஞ்சு நெகிழும்; அநந்தரம் பறையை யடிப்பார்கள்; இதில் வன்மையாலே பட்டுக் கிடக்குமாம். அதுபோலே, இவர் பகவத் குணங்களிலே நைந்தபடி, இதர விஷய தர்சநத்தாலே முடியும்படியானார். நெடுநாள் அநுபவித்துப் போந்தாலும், கடக்கவிருந்தவன்று "நாம் இன்னது அநுபவித்தோம்" என்று ஸ்மரிக்கைக்கு ஒன்று இன்றிக்கே யிருக்குமிறே; இங்ஙனேயிருக்கச் செய்தேயும் அவற்றில் ச்ரத்தை பண்ணுகிறது பாபாதிசயமிறே.

விளக்கம் - (பாவியேனை) – திருவாய்மொழி (10-9-11) - அந்தமில் பேரின்பம் – என்பதாக, முடிவற்ற ஆனந்தத்துடன் பரமபதத்தில் இருந்து அனுபவிக்கவேண்டிய நான், இங்குள்ள சிற்றின்பங்களை அனுபவிக்க வேண்டியபடி உள்ளதே! ஆனால் இவ்விதம் அங்கு ஆனந்தத்தைச் சிறு காலம் அனுபவித்தாரா என்பதற்கு விடை தருகிறார். திருவாய்மொழி (4-5-3) - வீவிலின்பமிகவெல்லை நிகழ்ந்தனன் - என்று கூறியவர் அல்லவோ இப்படிக் கூறுகிறார்! (பல) - ஏதோ ஒன்றில் மட்டும் சூழ்ந்து ஈடுபடலாம்படி உள்ள நிலை இந்த விஷயங்களில் இல்லை. (நீ காட்டிப் படுப்பாயோ) – "படுப்பாயோ" என்றால், "இம்சிப்பாயோ" என்று பொருள். அதாவது என்னைக் காப்பாற்ற வேண்டிய ரக்ஷகனாகிய நீ, இந்த விஷயங்களில் என்னை அழுத்தி முடிக்கப் பார்க்கிறாயா? (காட்டிப் படுப்பாயோ) - இந்த விஷயங்களைக் கண்ட நேரத்திலேயே இவை அழிவை ஏற்படுத்தும் என்பதைக் கூறுகிறார்; உலகில் உள்ளவர்கள் "இந்த விஷயங்களைக் காணாமல் இருந்தால் பிழைக்கமாட்டோம்" என்று தவித்தபடி உள்ள விஷயங்கள், இவருக்குக் கண்டவுடன் மயக்கம் அடையும்படியாகச் செய்கின்றன அல்லவோ? அசுணம் என்று ஒரு பறவை உண்டு. அவை எதற்கும் பிடிபடாமல் உள்ளதாகும்; அவற்றைப் பிடிக்க வருபவர்கள், அவற்றின் முன்பாகப் பாடுவார்கள்; அந்தப் பாட்டைக் கேட்டு அவற்றின் நெஞ்சம் நெகிழும்; அப்போது பறை வாத்யத்தை அடிப்பார்கள்; அந்த வாத்தியத்தின் வன்மையான ஓசை காரணமாக அவை மயக்கம் அடையும். அது போன்று பகவத் விஷயங்களில் ஈடுபட்டபடி இருந்த இவர், மற்ற விஷயங்களைக் கண்டவுடன் முடியும்படி ஆனார். உலக விஷயங்களை நீண்ட காலம் அனுபவித்தபடி இருந்தாலும், அவற்றை அனுபவித்து மீண்டபோது, "நாம் இத்தனை காலங்கள் இன்னது அனுபவித்தோம்" என்று நினைவில் கொண்டு வருவதற்கு ஒன்று கூட இல்லாமல் உள்ள நிலையே ஏற்படும். இப்படி

உள்ளபோதிலும், அவற்றில் ஈடுபாடு கொள்ளுதல் என்பது, அதிகமான பாபம் காரணமாகவே ஆகும்.

வ்யாக்யானம் - (தாவியித்யாதி) அந்ய பரோக்தியிலே ப்ராப்ய நிஷ்கர்ஷம் பண்ணுகிறார். (தாவி வையங் கொண்ட) நினைத்தது தலைக்கட்டவல்லனென்னும் சக்தி யோகஞ் சொல்லுகிறது. பூமிப் பரப்படங்கலும் அநாயாஸேந அளந்து கொண்டபடி. (தடந்தாமரைகட்கே) போக்யதையளவிறந்த திருவடிகளிலே. இத்தால், ப்ராப்யஞ் சொல்லுகிறது. “கூவிக் கொள்ளுங் காலம்” என்கையாலே, ப்ராபக வேஷஞ் சொல்லுகிறது. “இன்னம் குறுகாதோ” என்கையாலே, ருசி வேஷஞ் சொல்லுகிறது. இதர விஷய தர்சநம் முடியும்படியாய், உன் திருவடிகளில் போக்யதையறிந்து விடமாட்டாதவளவு பிறந்த பின்பு இன்னம் தாழ்க்குமத்தனையோ? பிள்ளானுடைய அந்திமதசையிலே நஞ்சீயர் நோவறியப் புக்கிருக்க, “கூவிக் கொள்ளுங்கால மின்னனங் குறுகாதோ?” என்று பலகால் சொல்ல, இத்தைக் கேட்டுச் சீயர் அழ, “சீயரே! நீர் கிடந்தழுகிறதென்? அங்குப் போய் பெறப் புகுகிற பேறு இதிலும் தண்ணிது என்று தோற்றியிருந்ததோ?” என்று பணித்தான்.

விளக்கம் – (தாவி இத்யாதி) - வேறு ஒன்றைக் குறிக்கும் வாக்கியத்தின் மூலம், பேற்றினை உறுதிபடுத்துகிறார்; அதாவது “கூவிக்கொள்ளும் காலம்” என்பது போன்று கால எல்லையை விண்ணப்பிக்கும் பாசுரம் மூலம், “தடந்தாமரைகட்கே” என்று “திருவடிகளே பெறுத்தக்கது” என உறுதிபட உரைப்பதாகக் கருத்து. (தாவி வையங் கொண்ட) - எண்ணியதை நிறைவேற்றி முடிக்கும் சக்தி கொண்டவன் என்பது கூறப்பட்டது. இந்தப் பூமியின் முழு பரப்பையும் எந்தவிதமான வருத்தமும் இன்றி எளிதாக அளந்து கொண்டான். (தடந்தாமரைகட்கே) - அளவற்ற இனிமை கொண்ட திருவடிகளில். இதன் மூலம், அடையப்பட வேண்டிய இலக்கு கூறப்பட்டது. “கூவிக் கொள்ளும் காலம்” என்பதன் மூலம் அடைய வேண்டி விண்ணப்பம் செய்பவருடைய தன்மை கூறப்பட்டது. “இன்னம் குறுகாதோ” என்பதன் மூலம், இலக்கின் மீது உள்ள ருசியின் தன்மை கூறப்பட்டது. மற்ற விஷயங்களின் மீது உள்ள ஈடுபாடு முடியும்படியாக, உனது திருவடிகளின் இனிமையை அறிந்து கொண்டு, விட இயலாதபடியான நிலை ஏற்பட்ட பின்னர், மேலும் தாமதம் செய்வாயோ? இவ்விதம் அழைத்தவர்கள் உள்ளனரோ என்பதற்கு ஒரு நிகழ்வைக் காண்பிக்கிறார்; பிள்ளான் தனது அந்திம நிலையில் உள்ளதை

அறிந்த நஞ்சீயர் அருகில் அமர்ந்திருந்தார்; அப்போது பிள்ளான், “கூவிக் கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ?” என்று பலமுறை கூறியபடி இருந்தார். இதனைக் கேட்ட நஞ்சீயர் அழுதபோது பிள்ளான் அவரிடம், “சீயரே! நீவிர் இவ்விதம் அழுவது ஏன்? அங்கு சென்ற பின்னர் அடியேன் அடையப்போகும் பேறானது, இங்குள்ள நிலையைக் காட்டிலும் தாழ்ந்தது என்று உமக்குப் புலப்பட்டதோ?”, என்றார்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 9)

1-2-3. பணைத்தோள் இள ஆய்ச்சி பால் பாய்ந்த கொங்கை
அணைத்து ஆர உண்டு கிடந்த இப்பிள்ளை
இணைக் காலில் வெள்ளித் தளை நின்று இலங்கும்
கணைக்கால் இருந்த ஆ காணீரே காரிகையீர் வந்து காணீரே

பொருள் - மூங்கில் போன்ற தோள்களை உடையவளும், இளமையான பருவத்தை உடையவளுமான யசோதையின், பால் சொரிகிற முலையை, திருக்கரங்களால் அணைத்து, திருவயிறு நிறையும்படியாகப் பருகிக் கிடக்கும் இந்த க்ருஷ்ணனுடைய ஒன்றுக்கொன்று பொருந்தப் பெற்றுள்ள திருவடிகளில் உள்ள வெள்ளித்தண்டையை விடுத்து, நன்கு விளங்கியபடி உள்ள கணைக்கால் இருக்கின்றபடியைக் காணுங்கள்! சிநேகம் உடைய அழகிய பெண்களே! நீங்கள் வந்து காணுங்கள்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேச அவதாரிகை - திருவுகிரை அநுபவித்துத் திருக்கணைக்காலை அநுபவிக்கிறார்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (பணையித்யாதி) பசுத்த மூங்கில் போலேயிருக்கிற தோளையுடையளுமாய், பருவத்தால் இளையளுமான ஆய்ச்சி. இப்போது இவளை வர்ணிக்கிறது பர்த்ரு ஸம்ச்லேஷ யோக்யமான காலங்களிலும் பிள்ளையை அணைக்கையாலே. பிள்ளையை அணைத்து, பிள்ளை வாய்

வைப்பதற்கு முன்னே நெறித்துப் பாய்ந்த முலையைக் கொடுக்க, வயிறார உண்டு நீர்ப்பரனாய்க் கிடந்தது கண்டு "இப்பிள்ளை" என்று ஸமுதாய சோபையை அநுபவிக்கப்புக்கு, ஒன்றுக்கொன்று ஒப்பான திருவடிகளில் ப்ரகாசிக்கிற வெள்ளித்தளை சித்தாபஹாரம் பண்ணச் செய்தேயும் அத்தை ஒழித்து அது மிகையான திருக்கணைக்காலை அநுபவித்து, இது இருந்த ப்ரகாரத்தை அநுபவ யோக்யரான நீங்களும் வந்து காணுங்கோ ளென்கிறார். "காரிகையீர்" என்கிறது காமதந்திர ந்யாயத்தாலே வடிவழகில் வாசியறிந்து ஸ்நேஹிகளுமாய் அவயவாந்தரத்தில் போகமாட்டாத யுவதிகளை அழைத்துக் "காணிகோள்", "காணிகோள்" என்கிறார். "காரிகையீர்" என்கையாலே பக்திபாரவச்யமுடையாரை அநுபவிக்க வழைக்கிறார்.

மாமுனிகள் வ்யாக்யான அவதாரிகை - திருவடிகளை அநுபவித்த வநந்தரம், திருக்கணைக்காலினழகை அனுபவிக்கிறார்.

விளக்கம் – திருவடிகளை அனுபவித்த பிறகு, திருக்கணைக்காலின் அழகை அனுபவிக்கிறார்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (பணைத்தோளிளவாய்ச்சி) பசுமைக்கும் சுற்றுடைமைக்கும் செவ்விக்கும் வேய் போலேயிருந்துள்ள தோளையுடையளாய், பருவத்தால் இளையளுமான ஆய்ச்சியுடைய. இப்போது இவளை வர்ணிக்கிறது, அழகுக்கும் பருவத்துக்குமீடாக போக பரவசையாயிருக்கையன்றிக்கே, பிள்ளையை ஸ்நேஹித்து நோக்கிக் கொண்டு போருமவளென்னுமிடம் தோற்றுகைக்காக. (பால் பாய்ந்த கொங்கை) ஸ்நேஹத்தாலே நெறித்துப் பால் சொரிகிற முலையை. (அணைத்தாரவுண்டு கிடந்த விப்பிள்ளை) திருக்கைகளாலே அணைத்து வயிறாரவுண்டு, அத்தாலே ஹ்ருஷ்டனாய்க் கிடந்த இப்பிள்ளையுடைய. (இணைக்காலிலித்யாதி) அந்யோந்யம் சேர்த்தியழகையுடைய திருவடிகளில் வெள்ளித்தண்டை நின்று விளங்கா நிற்கிற கணைக்காலின் அழகிருந்தபடியை, அநுபவ யோக்யரானவர்கள் வந்து காணுங்கோள். (காரிகையீர் வந்து காணீரே) அழகுடையவர்க ளாகையாலே அழகின் வாசியறியும் நீங்கள் வந்து காணுங்கோள்.

விளக்கம் – (பணைத்தோள் இள ஆய்ச்சி) - பசுமையாகவும், வட்ட வடிவோடு கூடியிருப்பதாகவும், அழகாகவும் உள்ள மூங்கிலைப் போன்றுள்ள தோள்களை

உடையவளாய், இளமையான உருவத்தை உடையவளுமான யசோதை. எதற்காக இப்போது இவளை வர்ணிக்கவேண்டும்? காரணம், அழகிற்கும் பருவத்திற்கும் ஏற்றவாறு போகங்களில் வயப்பட்டு இருப்பவள் என்னும் தோற்றத்திற்காக அல்ல. கணவனோடு கூடியிருக்கத் தகுதி உடைய காலங்களிலும், இவள் இவ்வாறு இல்லாமல், தனது பிள்ளையை ஸ்நேஹித்துக் கொண்டு அணைத்தே உள்ளாள் என்பதைக் காட்டுவதற்காகவே ஆகும். (பால் பாய்ந்த கொங்கை) - இப்படி பிள்ளையை ஸ்நேஹத்தாலே அணைத்து இருக்க, அவன் வாய் வைப்பதற்கு முன்னே நெறித்துப் பால் சொரிகிற முலையை. (அணைத்து ஆர உண்டு கிடந்த இப்பிள்ளை) - திருக்கரங்களால் அணைத்து, வயிறு நிறையும்படி உண்டு, அதனாலேயே மகிழ்ந்து கிடக்கும் இப்பிள்ளையையுடைய. (இணைக்கால் இத்யாதி) - ஒன்றுக்கொன்று பொருந்தியுள்ள அழகான திருவடிகளில் பொருந்தப் பெற்றிருக்கிற வெள்ளித் தண்டையானது, சித்தத்தை வசியம் செய்ய, அதில் ஈடுபடாமல், அதனைக் காட்டிலும் மேன்மையாக விளங்கியிருக்கும் கணைக்காலின் அழகினை அனுபவிக்க விரும்புவர்கள் வந்து காணுங்கள். (காரிகையீர் வந்து காணீரே) - சிநேகம் உடையவர்கள் ஆகையாலே, அழகுடைய திருமேனிக்கும் அதனை அலங்கரிக்கும் ஆபரணத்திற்கும் வேறுபாடு அறியும் அழகான யுவதிகளே! நீங்கள் வந்து காணுங்கள்.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

பெரிய திருமொழி

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 8)

வ்யாக்யானம் - "யாருமோர் நிலைமையனென வறிவரிய வெம்பெருமான் யாருமோர் நிலைமையனென வறிவெளிய வெம்பெருமான்" ப்ரஹ்மாதிகளுடைய ஜ்ஞாநத்துக்கும் அவிஷயமாயிருக்கும். ஓரிடைச்சிக்கும் வேடனுக்கும் கைபுகுந்திருக்கும். எத்தனையேனு முயர்ந்தவனாகிலும் பெருமாளுடைய ஒருநாளைப் புறப்பாடு காணானாகில் அவன் பெரியனல்லன்; எத்தனையேனும் சிறியனானவன் பக்கலிலும் தப்பாது அவருடைய பார்வை; தப்புகிறான் யாவனொருவன், அவன் அவஸ்துக்களோடு மெண்ணப்படான்; எண்ணப்படாமையிலே எண்ணப்படும் - எல்லாரும் நிந்தித்து "சீசீ" என்னப்படும். இவனை நிந்திப்பார் வஸிஷ்ட்டாதிகள் துடக்கமானார் நால்வரிருவரோ வென்னில்; "நிந்திதஸ்ஸவஸேல்லோகே"; "லோகே - நிந்தித" இவனை நிந்திக்கைக்குரிய ரல்லாதாரில்லை. விஷய ப்ரவணனானவன், இப்போது பழியாய் மேல் நரகமா யிருக்கச்செய்தே, தான் "நல்லது செய்கிறோம்" என்றிருக்குமிறே; அப்படி தான் "நல்லது செய்கிறோம்" என்றிருக்குமோ வென்னில்; "ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே" தானும் தன்னை நிந்தித்துக் கொள்ளும். திருக்கைத்தல மிழந்தவன் "இற்றைப் புறப்பாடு காணப் பெறாத நாம் கர்ப்பூரமும் எலுமிச்சங்காயும் பெற்றோமாகில் முடிந்து பிழைக்கலாயிற்று" என்றிருக்குமிறே; ஒருநாளைப் புறப்பாடிழந்தார் வார்த்தை யிதுவானால், அநாதிகால மிழந்தவர்க்கு "வாடினேன்" என்றல்லது வார்த்தை யில்லையிறே.

விளக்கம் - இதனையே நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் (1-3-4) - யாரும் ஓர் நிலைமையன் என அறிவு அரிய எம் பெருமான் யாரும் ஓர் நிலைமையன் என

அறிவு எளிய எம்பெருமான் - என்றார். நான்முகன் முதலான தேவர்களின் ஞானத்திற்கும் எட்டாமல் இருப்பவன் ஸர்வேச்வரன் ஆவான். வேடனுக்கும் எளியவனானவன் இவன் ஆவான். எவ்வளவு வேண்டுமானாலும் உயர்ந்தவனாக இருந்தாலும், நம்பெருமாளுடைய ஒருநாள் புறப்பாட்டினைக் காணாதவன் என்றால், அவன் உயர்ந்தவன் அல்லன். அதாவது எவ்வளவு கீழ்மையானவனாக இருந்தாலும் அவன் மீது படுகின்ற, நழுவாத இராமனுடைய பார்வையை, "வேண்டாம்" என்று தள்ளி நழுவும் ஒருவனை உயிரற்ற ஜடப்பொருளாகக் கூட மதிக்கமாட்டனர். இப்படி உள்ளவனை எல்லோரும் "சீசீ" என இகழ்ந்து மட்டுமே நினைப்பர். இவனை இவ்வாறு மதிக்காது இகழ்வது வசிஷ்டர் தொடக்கமாக ஒரு சிலரோ என்றால், "நிந்திதஸ்ஸவஸேல்லோகே - இவனை இகழத் தகுந்தவர்கள் என்று இல்லாதவர்களே இல்லை" என்றாகும். உலக விஷயங்களில் ஈடுபட்டுத் திரியும் ஒருவன் இவ்வாறு அனைவராலும் பழிக்கும் அளவிற்குத் தன் மீது தானே நரகத்தைத் வரவழைத்துக் கொண்டாலும், இதனை அறியாத அவன் "நான் நல்லதையே செய்கிறேன்" என்று இருப்பான். இப்படி "நான் நல்லதையே செய்கிறேன்" என்று நிம்மதியாக இருக்கமுடியுமோ என்றால் "ஸ்வாத்மா அபி ஏநம் விகர்ஹதே - அவனுடைய ஆத்மாவே அவனைப் பழிக்கும்". மேலும் திருமங்கையாழ்வார் தன்னைத் தானே இகழ்ந்ததற்கு ஒரு உதாரணம் கூறுகிறார். திருவரங்கத்தில் உள்ள நம்பெருமாளுடைய திருக்கைத்தல சேவையை இழந்தவன், "இன்றைக்கு புறப்பாட்டினைக் காணப் பெறாமல் போனது. இனி கர்ப்பூரமும் எலுமிச்சையும் பெற்றேன் என்றால் முடிந்து பிழைப்பேன்" என்று ஒருநாள் நம்பெருமாள் புறப்பாட்டினை இழந்தவருடைய வார்த்தை இதுவானால், கணக்கில்லாத காலம் இழந்தவர் "வாடினேன்" என்று வருந்துவதில் தவறில்லை.

ஸ்வாமி திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்